**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES D.W.1**
**OS.NO.56/2018 connected with connected with OS.57/2019, 24/2019, 66/2019**

**Name** : செல்வம்

**Father/Husband Name** : ரவிக்குமார்

**Age** : 39

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.03.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 03.00 p.m

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் பிறந்த தேதி 28.06.1987. என் தந்தை பெயர் ரவிக்குமார். ரவிக்குமார் கோவிந்தசாமியின் மகன். நான் கோவிந்தசாமியின் பேரன். இறந்தவிட்ட முதலாம் வாதி பன்னீர்செல்வம் மற்றும் 2ம் வாதி லிங்கமூர்த்தி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சொத்து 27.01.1955 ல் ஆதி மூலம் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். அசல் கிரையப் பத்திரம் வா.சா.ஆ.2 ஆக நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஆதிமூலம் அவர் உயிருடன் இருந்த காலத்தில் தன் பெயரில் இருந்த கிரைய பத்திரத்திற்கு உட்பட்ட சொத்தை அவரின் மகன்கள் சாம்பசிவம் மற்றும் கோவிந்தசாமி இருவருக்கும் ஏற்படுத்தி கொடுத்த குடும்ப ஏற்பாடு பாகப்பிரிவினை படிவத்தின் சர்வே எண் குறிப்பிட்டு விஸ்தீரணத்தையும்

குறிப்பிட்டு ஐக்பந்திகளுடன் பாகப்பிரிவினை ஏதும் செய்து கொடுக்கவில்லை என்றால் சரியா என்றால் சர்வே எண் எதுவும் குறிப்பிடவில்லை ஆனால் மேல் பாகம் சாம்பசிவம் அடைய வேண்டியதாகவும் கீழ் பாகம் கோவிந்தசாமி அடைய வேண்டியது என்றுதான் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு சொத்து குறிப்பாக குடும்ப ஏற்பாடு பாகப்பிரிவினை பத்திரத்தில் (கூர்சீட்) குறிப்பிடவே இல்லை என்றால் சரியல்ல 1978 ல் பாகப்பிரிவினை செய்தபோது அனைத்து சொத்துக்களையும் வீடு உட்பட மேல்பாகம், கீழ் பாகம் என்று சரிபாகமாக பிரித்துக்கொடுத்துவிட்டார். வாதிகள் ஆதிமூலம் தன் பெயரில் 1955 ல் கிரையம் பெற்ற சொத்தை தன் மூத்த மகன் சாம்பசிவத்தின் மகன்கள் அதாவது பேரன்கள் பன்னீர் செல்வம் மற்றும் லிங்கமூர்த்திக்கும் 1 ஏக்கர் சொத்தை சமமாக அடைந்துக்கொள்ள விருப்புறுதி ஆவணம் (Will) உயில் எழுதி பதிவு செய்து கொடுத்திருக்கிறார் என்றால் அது தவறான உயில். அவர் உடல்நிலை சரியில்லாதபோது அவரை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றபோது எழுதியிருக்கிறார்கள். (சாட்சி சொல்கிறார் 1978 ல் பாகம் பிரிக்கப்பட்டது அவருக்கு உயில் எழுத வேண்டிய அவசியமே இல்லை. )

அந்த உயிலின் வாசகத்திலேயே அவர் நல்ல உடல் நிலை மற்றும் மனநிலையிலும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் ஒரு சாதாரணமாக பத்திரத்தில் எழுதுவார்கள். ஆதிமூலம் ஏற்படுத்தி 27.01.1985 பதிவு அசல் உயில் நீதிமன்றத்தில் வா.த.சா.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். (காட்பாடி நீதிமன்றத்தில் உள்ள அசல் வழக்கு எண் 118/2013 என்ற வழக்கில்

தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி சொல்கிறார்.) ஆதிமூலம் 18.03.1987 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். ஆதிமூலத்தின் இறப்பு சான்று வா.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ஆதிமூலம் ஏற்படுத்திய உயில் சுமார் 40 வருடத்திற்கு முற்பட்டது என்றால் சரிதான். ஆதிமூலத்தின் மற்றொரு மகன் கோவிந்தசாமி 2006 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்து சுமார் 21 வருட காலம் ஆகிறது என்றால் சரிதான். உயில் ஏற்படுத்திய 1985 ம் ஆண்டு முதல் அவர் இறந்த 2006 ம் ஆண்டு வரை 21 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான். கோவிந்தசாமி உயிருடன் இருந்த காலத்தில் சுமார் 21 ஆண்டுகளாக தன்னுடைய தந்தை ஆதிமூலம் சகோதரன் சாம்பசிவம் மற்றும் சாம்பசிவத்தின் மகன்கள் பன்னீர்செல்வம், லிங்கமூர்த்தியுடன் இறக்கும் வரை வழக்கு சொத்து சம்பந்தமாக எந்தவிதமான தகராறும் சண்டை சச்சரவு வம்பு வழக்கு எதிலும் ஈடுபடவில்லை என்றால் சரிதான்.

கோவிந்தசாமி அவரின் தந்தை ஆதிமூலம் 1987 ல் இறந்தவுடன் நடைமுறைக்கு வந்துவிட்ட உயிலை ஏற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. (சாட்சி சொல்கிறார் 2013 ல் எங்களை உள்ளே வரக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு வழக்கு தாக்கல் செய்தபோதுதான் பிரச்சினை ஆரம்பித்தது. )

உயிலின் அடிப்படையில் இறந்துவிட்ட பன்னீர்செல்வத்தின் வாரிசுகள் மற்றும் லிங்கமூர்த்தி கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உயிலின் அடிப்படையில் 12.01.1998 லேயே வருவாய் துறை ஆவணங்களில்

பன்னீர்செல்வம், லிங்கமூர்த்தி பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டு சுமார் 28 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இருந்து வருகிறது என்றால் சரிதான்.

அந்த உத்தரவு நீதிமன்றத்தில் வா.த.சா.ஆ-7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயிலை ஏற்படுத்திய ஆதிமூலம் அவரை தொடர்ந்து பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்தி பெயரிலான வருவாய் துறை ஆவணங்கள் வா.த.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் இறந்துவிட்ட முதல் வாதி பன்னீர்செல்வம் அவருக்குரிய உயில்படியான சொத்தை தன் மனைவி தனலட்சுமி பெயரில் 03.07.2015 ல் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் அது வா.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு.

வாதி லிங்கமூர்த்தி உயிலின் சம பாக சொத்தை மைனர் மகன் புவின் 3ம் வாதியின் மீது 03.07.2015ல் பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரம் ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் அது வா.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுவும் தவறுதான். ஆதிமூலம் 1987ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் பிறந்த வருடம் 1987 என்றால் சரிதான். அப்போது எனக்கு ஒரு வயது கூட நிறைவடையவில்லை என்றால் சரிதான். ஆனால் தற்போது 40 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட உயிலை எந்தவித காரணகாரியமும் இன்றி மறுக்கிறேன் என்றால் சரியல்ல.

நாங்கள் இந்த வழக்கின் பிரதிவாதிகள் அனைவரும் பாகப்பிரிவினை குடும்ப ஏற்பாட்டில் எங்களுக்கு கிடைத்த விற்றுவிட்ட சொத்துக்களையும், உயிலில்

கண்ட சொத்தையும் மற்றும் எங்களுக்குரிய சொத்தை இரயில்வே துறை கட்டாய நிலம் ஆர்ஜிதம் செய்து எடுத்துக்கொண்டதையும் சேர்த்து பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்தி மீது பாகப்பிரிவினை வழக்கு கூடுதல் மாவட்ட நீதிமன்றம் எண் 1 ல் அசல் வழக்கு எண் 57/2012 என்று தொடர்ந்து முகாந்திரம் அற்ற வழக்கு என்ற காரணத்தினாலும், வழக்கு சொத்து உயில் சம்பந்தப்பட்டது என்றாலும் எங்களுக்கு எந்தவகையிலும் உரிமை இல்லாத காரணத்தினாலும், அந்த வழக்கை வழக்கு தொடர்ந்த நாங்களே வாப்பஸ் வாங்கிக்கொண்டோம் என்றால் சரியல்ல.

மேற்கண்ட வழக்கின் பதிவேடு நீதிமன்றத்தில் வா.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் பல்வேறு வகையில் பன்னீர்செல்வத்திற்கும் லிங்கமூர்த்திக்கும் சட்டத்திற்கு எதிராக சட்ட விரோதமாக செயல்பட்டதால் தனித்த தடை உத்தரவு கோரி எங்கள் மீது அசல் வழக்கு எண் 118/2013 காட்பாடி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் தொடர்ந்தார்கள் என்றால் வழக்கு தாக்கல் செய்தது சரிதான் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. சட்டத்திற்கு எதிராக நாங்கள் செயல்படவில்லை. அந்த வழக்கில் அசல் உயில் ஆவணத்தை பன்னீர்செல்வம், லிங்கமூர்த்தி தாக்கல் செய்யவில்லை என்றும் குறியீடு செய்யவில்லை என்ற காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் உயிலை நிரூபணம் செய்யாததால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கில் உயிலே தாக்கல் செய்யாதபோது நிரூபணம் செய்ய முடியாது என்றால் நகல்தான் தாக்கல் செய்திருந்தார்கள்.

அதன் மீது ஏற்பட்ட முதல் மேல் முறையீடு வேலூர் சார்பு நீதிமன்றத்தில்

48/2015 கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பை உறுதி செய்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் மீது ஏற்பட்ட இரண்டாவது மேல்முறையீட்டு எண் 900/2017 சென்னை உயர் நீதிமன்றத்தில் அவ்வாறே தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்தி வகையறாக்கள் உச்ச நீதிமன்ற முன்தீர்ப்பு நெறிமுறையின்படி தற்போது இந்த அசல் வழக்கு எண் 56/2018 ஐ சொத்து தங்களுக்குரியது என்றும் தாங்கள கூட்டாக அனுபவித்து வருவதை பிரதிவாதிகளாகிய நாங்கள் எந்த வகையிலும் அவர்கள் சுவாதீனத்தையும், அனுபவத்தையும் இடையூறு செய்யக்கூடாது என பிரதிவாதிகளாகிய எங்கள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தது சரிதான். தடை உத்தரவு கேட்டு அசல் வழக்கு எண் 56/2018 வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

எங்களின் வழக்கு சொத்தை பிரதிவாதிகள் எந்தவித உரிமை மூலமும் இன்றி விற்கவோ, வில்லங்கப்படுத்தவோ கூடாது என வாதிகள் பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்தி வகையறாக்கள் நிரந்தர தடை உத்தரவு கோரியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலம் பாரா 5 ல் ஆதிமூலம் மற்றும் அவரின் மகன் சாம்பசிவம் வழி வந்த பேரன்கள் பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்தி கூட்டாக இந்த வழக்கு சொத்தை அடமானம் செய்து மீட்டிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. சாட்சி சொல்கிறார் வேலூர் மத்திய கூட்டுறவு வங்கியில் ஆதிமூலம் அவரின் மகன் சாம்பசிவம் மற்றும் லிங்கமூர்த்தி ஆகியோர் வைத்த அடமானத்தை நான்தான் முறைப்படி ரத்து செய்து வாங்கி வந்தேன்.

அதன் அசல் பைசல் ரசீதை சார்பதிவளார் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. (வேண்டும் என்றால் தாக்கல் செய்கிறேன் என்று சாட்சி சொல்கிறார்.) ஆதிமூலம் குடும்ப ஏற்பாடு பட்டியல் படிவத்தில் தன் மகன்கள் சாம்பசிவம் மற்றும் கோவிந்தசாமிக்கு தன் சொத்துக்களை கொடுத்துவிட்ட நிலையில் தனக்கென தன் பெயரிலான தானே கிரையம் பெற்ற 1955 கிரைய சொத்தை அதாவது உயில் வழி தன் பேரன்கள் பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்திக்கு கொடுத்த இந்த வழக்கு சொத்தை தான் உயிருடன் இருந்த காலம் வரை தானே அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல.

என்னுடைய பிரமாண வாக்குமு்லம் பாரா 7ல் பதிவு செய்யப்பட்ட உயிலில் இருக்கும் ஆதிமூலத்தின் கையெழுத்துக்கள் பக்கத்திற்கு பக்கம் மாறுபடுவதாகவும், வெவ்வேறு விதமாக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட உயில் போலியானது என்று சொல்லும் காரணத்தினால் எழுதப்படவே இல்லை என்பதையும், அது உண்மை தன்மை அற்றது என்பதையும் எங்கள் தரப்பில்தான் நாங்கள் நிரூபிக்க வேண்டும் என்று வாதிகள் தரப்பில் சொல்கிறார்கள் என்றால் அதனால்தான் சார் பதிவாளர் விசாரணையின்போது அவரும் கூறியிருக்கிறார். பதிவு செய்யப்பட்ட உயிலில் ஆதிமூலத்தின் கைரேகை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பதிவேட்டிலும் அவரின் கைரேகை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைரேகையுடன் அவர் பதிவின்போது கையெழுத்தும் செய்திருக்கிறார் என்றால் சரிதான்.

கையெழுத்தை நாங்கள் பக்கத்திற்கு பக்கம் மாறுபட்டுள்ளதாக கூறியுள்ள நிலையில் அதை கைரேகை மற்றும் கையெழுத்து பரிசோதனைக்கு அனுப்ப வழக்கு நிலுவையில் உள்ள தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் அசல் வழக்கு எண் 24/2019 வழக்கை உயில் வழி பன்னீர்செல்வம் மற்றும் லிங்கமூர்த்திக்கு உரிமையான சொத்து விவரத்தை குறிப்பிட்டு இறந்துவிட்ட பன்னீர்செல்வம் வாரிசுகள் மீது பன்னீர்செல்வம் தன் மனைவி தனலட்சமி பெயரில் ஏற்படுத்திய 03.07.2015 தேதியிட்ட தானப்பத்திரம் செல்லாது என அறிவிக்கக்கோரியும், மற்ற இதர பரிகாரங்களை கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

அதைபோலவே லிங்கமூர்த்தி தன் மைனர் மகன் புவின் பெயரில் ஏற்படுத்திய 03.07.2015 ல் ஏற்படுத்திய தானப்பத்திரம் செல்லாது என அறிவிக்கக்கோரியும், அதனை சார்ந்த இதர பரிகாரங்களையும் கோரியிருக்கிறேன் என்றால் சரிதான். (சாட்சி சொல்கிறார் உயில் வழி அல்ல தானப்பத்திரம் செல்லாது என்று தாக்கல் செய்துள்ளேன்.)

இந்த வழக்கின் 6ம் பிரதிவாதியாகிய நான் லிங்கமூர்த்தி மீது உயில் சம்பந்தப்பட்ட சொத்தை குறித்து எவ்வித உரிமை மூலம் இன்றி ஏதோ நாங்கள்தான் சுவாதீன அனுபவத்தில் இருப்பது போல் எங்கள் சுவாதீன

அனுபவத்தை தடை செய்யக்கூடாது எனறும் தனித்த தடை உத்தரவு கோரி இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 66/2019 தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சுவாதீன அனுபவத்தில் நாங்கள்தான் இருக்கிறோம் அதனால்தான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறோம்.

அசல் வழக்கு எண் 56/2018 ன் வாதிகள் சரியான காரணகாரியத்தின் (Cause of Action) அடிப்படையில் வழக்கு சொத்து தங்களுக்கு உயில் வழி கூட்டாக பத்தியப்பட்டது என்று அறிவிக்கக்கோரியும், அதனை சார்ந்து அவர்கள் சுவாதீன அனுபவத்தை தடை செய்யக்கூடாது என நிரந்தர தடை உறுத்துக்கட்டளை கோரியும், வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகளாகிய நாங்கள் அனைவரும் எந்த வகையிலும் வழக்கு சொத்தை வில்லங்கப்படுத்தக்கூடாது என நிரந்தர தடை உத்தரவும் கோரியிருக்கிறார்கள் என்றால் சரிதான்.

இந்த அசல் வழக்கு எண் 56/2018 நீதிமன்றத்தில் 05.04.2018 ல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு ஏற்பட்ட நாளில் இருந்து நாங்கள் எத்தனைய வில்லங்கம் வழக்கு சொத்தை செய்திருந்தாலும் அது இந்த வழக்கின் தீர்ப்பிற்குட்பட்டது என்றால் சரியல்ல.

அவ்வாறே நாங்கள் சட்ட நடைமுறைக்கு முரணாக எங்கள் பெயரில் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது ஏற்படுத்திக்கொண்ட வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் செல்லத்தக்கது அல்ல என்றாலும் மற்றும் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கும் தீர்ப்பாணைக்கும் உட்பட்டது என்றால் சரியல்ல.

இந்த வழக்கின் இரண்டாம் பிரதிவாதி லிங்கமூர்த்தி குறிப்பாக என் மீது மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் மீதும் நிலுவையில் இருந்து வரும் இந்த அசல் வழக்கு எண் 56/2018 அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 19031/2018 தாக்கல் செய்யப்பட்டு இன்னும் முடிவுறா நிலையில் நிலுவையில் இருந்து வருகிறது என்றாலும் அந்த மனுவை வாதி தரப்பில் சான்றாவணம் 11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அது குறித்து எங்களுக்கு தகவல் எதுவும் தெரியவில்லை.

அதுவும் சிவில் நீதிமன்ற தீர்ப்பிற்கு உட்பட்டது என்றுதான் மனு உயர்நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால் அது குறித்து எந்த தகவலும் இல்லை. அந்த மனுவானது எங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்ட மனு என்றால் சரியல்ல.

ஆகவே வாதிகள் தாங்கள் தொடர்ந்த அசல் வழக்கு எண் 56/2018 ல் பிரார்த்தித்தவாறு தீர்ப்பும் தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுகிறார்கள் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் :04.30 p.m

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.03.12 17:40:20 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.